# பாடம் 29: நிசேயா நம்புகை

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (8 வயது) | : 1 முதல் 35 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (11 வயது) | : 1 முதல் 36 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (14 வயது) | : 1 முதல் 38 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், மீட்படைய விரும்பும் மக்களுக்குத் திருச்சபை கற்பிக்கின்ற நம்புகைகள் குறித்து நாம் கற்றோம். தொடக்கத் திருத்தூதர்களின் காலத்தில் இருந்து இவ்விதமாகவே திருச்சபை விசுவாசத்தைக் கையளித்து வருகிறது. திருத்தூதர்களின் நம்புகை பற்றி முந்திய பாடத்தில் நாம் ஏற்கெனவே கற்றுள்ளோம். இந்த பாடத்தில், நம் கத்தோலிக்க விசுவாசத்தின் நீண்டப் பொழிப்பான நிசேயா நம்புகை பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. கத்தோலிக்கத் திருச்சபை நிசேயாவில் (கி.பி. 325) நடத்திய முதல் பொதுச் சங்கத்தில் நிசேயா நம்புகை முதலில் உருவாக்கப்பட்டது, பின்னர் கொன்ஸ்தாந்திநோபிளில் (கி.பி. 381) நடைபெற்ற இரண்டாம் பொதுச் சங்கத்தில் விவாதித்து, ஏற்கப்பட்டு, கிறிஸ்தவ விசுவாசத்தின் உண்மை வெளிப்படுத்தலாக அங்கீகாரம் பெற்றது.

2. திருத்தூதர்களின் நம்புகையின் விசுவாச அறிக்கை மீது கட்டியெழுப்பப் பெற்ற நிசேயா நம்புகை, அக்காலத்தின் பல திரிபுரைகளுக்கு எதிராகத் திருச்சபையைத் தற்காத்துள்ளது. அக்காலத்தில் முதன்மையும் மிக முக்கியமுமானத் திரிபுரையாக இருந்தது ஆரியவாதம், அது இயேசு கிறிஸ்துவின் முழு இறைத்தன்மையை மறுத்த நான்காம் நூற்றாண்டு திரிபுரை ஆகும். அதன் நிறுவனரும், எகிப்தின் அலெக்சாந்திரியாவின் மிகப் புகழ்பெற்ற குருவுமான ஆரியுஸின் பெயரால் இந்த திரிபுரை இப்பெயர் பெற்றது. அவரது கோட்பாடு மீதான விவாதம் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் திருச்சபைக்கு அழுத்தம் தரும் விடயமாக இருந்தது. கடவுள் பேறாகாதவராகவும் தொடக்கமற்றவராகவும் இருக்கிறார் என்று போதித்து, கடவுளின் எல்லை கடந்த நிலையைப் பாதுகாக்க ஆரியுஸ் விரும்பினார். மகன் பேறானவராக இருக்கிறதால், தந்தையைப் போன்று அதே விதத்தில் கடவுளாக இருக்க முடியாது. மகனும் மற்றப் படைப்புயிரிகளைப் போன்று படைக்கப்பட்டு, தந்தையின் திருவுளத்தால் இருக்கிறார் என்று ஆரியுஸ் நினைத்தார். (தற்போது, உண்மையின் பெரும் சாட்சியாக ஆரியுஸைப் போற்றும் யெகோவா சாட்சிகள் இந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.)

3. ஆரியவாதம் அக்காலத்தின் மிகவும் தொல்லைத்தரும் திரிபுரையாக இருந்தாலும், அந்த ஒன்று மட்டுமே பிரச்சனையாக இல்லை. அக்காலத்தில் *லெக்ஸ் க்ரெதேந்தி*-ஐ (விசுவாச விதி; மக்கள் எதை நம்பினர்) உறுதி செய்யவும், லெக்ஸ் ஒராந்தி-ஐ (செப விதி; மக்கள் எப்படி வழிபாடு செய்தனர்) சிந்தையாக்கம் செய்து நடைமுறைப்படுத்தவும் நிசேயா நம்புகை அவசியமாக இருந்தது.

4. புதிய ஏற்பாட்டில் எந்த நூல்கள் இடம்பெறுமெனத் திருச்சபை தீர்மானிக்கும் முன்பே நிசேயா நம்புகை உருவாக்கப்பட்டது என்ற அம்சம், முக்கியமான ஒன்று என்றாலும் பெரிதும் கவனிக்கப்படுவதில்லை. விவிலியத்தில் இன்று நாம் கொண்டுள்ளபடி, புதிய ஏற்பாட்டின் ஏவுதல் பெற்ற நூல்களின் பட்டியலை, முதலில் எகிப்தின் அலெக்சாந்திரியா ஆயரான புனித அத்தனாசியுஸ் தமது 39வது மேய்ப்புசார் மடலில் கி.பி. 367ஆம் ஆண்டு ஒருசேரத் தருகிறார். இந்த புனித நூல்களின் பட்டியலே ‘‘திருமுறையாக’’, அல்லது புதிய ஏற்பாட்டின் புனித நூல்களாக இருக்க வேண்டுமென அவர் விரும்பினார்; அவர் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களைப் பட்டியலிட்டு, அவற்றைத் திருத்தூதர் சார்ந்த திருமுறையாகவும் அறிவித்தார். ‘‘இவற்றில் மட்டுமே உண்மை சமயப் படிப்பினையின் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது’’ என்று புனித அத்தனாசியுஸ் கூறினார். இந்த பட்டியல் ஹிப்போ (கி.பி. 393) மற்றும் கார்த்தேஜ் (கி.பி. 397) சங்கங்களால் உறுதி செய்யப்பட்டது. கி.பி. 405ஆம் ஆண்டில் திருத்தந்தை முதலாம் இன்னொசென்ட், எது திருமுறையை உருவாக்குகிறது என்றக் கேள்விக்கு பதிலிறுத்தபோது, இந்த பட்டியலையே பதிலாக வழங்கினார். இறுதியாக, கி.பி. 1545-63ல் நூற்றாண்டுகள் கடந்து கூடிய திரெந்து சங்கமும், இதே பட்டியலைப் பறைசாற்றியது. நிசேயா நம்புகை கிறிஸ்தவக் கோட்பாடுகளை வெளிப்படுத்தவும், பழமையானப் படிப்பினையை ஆய்ந்தறிய உதவவும் உருவாக்கப்பட்டது என்பதால், புதிய ஏற்பாட்டின் தொகுப்பில் நிசேயா நம்புகை

இயல்பாகவே தாக்கத்தை ஏற்படுத்தியது. அக்காலத்தில் சுற்றிலிருந்த பல எழுத்தாக்கங்களில் திருத்தூதர் சார்ந்த, தூய ஆவியாரின் ஏவுதல் பெற்றவற்றை புனித மறைநூலாக அறிவிக்க, நிசேயா நம்புகையால் கட்டுண்ட மக்களை கடவுள் தேர்ந்தெடுத்தார் என்று நாம் கூறலாம். ஆகவே, புதிய ஏற்பாட்டையும் கிறிஸ்தவத்தையும் முழுமையாக மறுக்காமல், ஒருவர் நிசேயா நம்புகையை ஏற்காமல் இருக்க முடியாது.

5. படிப்படியாக நிசேயா நம்புகையும் திருமுழுக்கு அருளடையாள வேட்பர்களுக்கான தகுந்த விசுவாச அறிக்கையாக உய்த்துணரப் பெற்றது. இது கத்தோலிக்கத் திருச்சபைக்கும், ரோமையில் இருந்து பிரிந்த எல்லா கீழைத் திருச்சபைகளுக்கும், பெரும்பாலான இன்றையச் சீர்திருத்தப் பிரிவுகளுக்கும் பொதுவான விசுவாச அறிக்கையாக இருக்கிறது.

6. நிசேயா - கொன்ஸ்தாந்திநோபிள் நம்புகை:

ஒரே கடவுளை நம்புகின்றேன்,
விண்ணகமும் மண்ணகமும்,
காண்பவை காணாதவை யாவும் படைத்த
எல்லாம் வல்ல தந்தை அவரே.
தந்தையிடமிருந்து கடவுளின் ஒரே மகனாகப் பேறான
ஒரே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் நம்புகின்றேன்;
இவர் காலங்களுக்கு முன்பே தந்தையிடமிருந்து பிறந்தார்.
கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக,
உண்மை கடவுளினின்று உண்மை கடவுளாக பிறந்தார்.
இவர் பேறானவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர், தந்தையோடு ஒரே பொருள்மமானவர்;
இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன.
மனிதரான நமக்காகவும் நமது மீட்புக்காகவும்
விண்ணகத்திலிருந்து இறங்கினார்,
இவர் தூய ஆவியால் கன்னி மரியாவிடம்
உடலெடுத்து மனிதரானார்.
நமக்காக பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு,
சிலுவையில் அறையப்பட்டு, இறந்து அடக்கம் செய்யப்பட்டார்,
மறைநூல்களின் படியே,
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.
விண்ணகத்துக்கு எழுந்தருளி,
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார்.
அங்கிருந்து வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட
மாட்சியுடன் மீண்டும் வரவிருக்கின்றார்,
அவரது ஆட்சிக்கு முடிவு இராது.
தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும்
ஆண்டவரும் உயிரளிப்பவருமான தூய ஆவியாரையும் நம்புகின்றேன்,
இவர் தந்தையோடும் மகனோடும் ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார்,
இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே.
ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதரியத் திருச்சபையை நம்புகின்றேன்.
பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக்கொள்கின்றேன்,
இறந்தோரின் உயிர்ப்பையும்,
வரவிருக்கும் மறுவுலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன். ஆமென்.

7. ***நம்புகின்றேன்.*** நாம் ''நம்புகின்றேன்'' என்று கூறுவதற்கு காரணம், இந்த நம்புகை வெறும் ஒருங்கமைப்புசார் நம்பிக்கைக்கும் மேலானது. ''நம்புகின்றேன்'' என்று நாம் கூறும் பொழுது, இந்த கூற்று நம்மிடம் இருந்து ஒரு பதிலிருப்பைக் கோருகிறது. இந்த நம்பிக்கை என் வாழ்வு முழுவதன் புறநோக்கை வடிவமைப்பதாக இருக்கிறது. மனதில் வெறுமனே அறிகின்ற நம்பிக்கை அல்லது நமது வாழ்வில் எந்த வேறுபாட்டையும் உருவாக்காத நம்பிக்கையில் இருந்து இந்த நம்பிக்கை வேறுபட்டது. சாத்தானும் கூட கடவுளை நம்புகிறான், ஆனால் இந்த நம்பிக்கை அவனிடம் இருந்து ஒரு சரியான பதிலிருப்பைக் கோருகிறது என்று அவன் நம்புவதில்லை. அவன் கடவுள் இருக்கிறதை நம்புகிறான், ஆனால் அவன் கடவுளில் நம்பிக்கை கொள்வதில்லை.

8. ***ஒரே கடவுளை.*** ‘‘ஒன்று’’ என்றச் சொல் திருத்தூதர்களின் நம்புகையில் உள்ளதற்கு ஒரு கூடுதலாக உள்ளது. பல தெய்வங்களை (தண்ணீர், காதல், போர், இன்னும்.) வழிபட்டப் பண்பாடுகளின் நடுவில், ஆபிரகாமுக்கும் மோசேக்கும் கடவுள் தம்மையே ஒரே, உண்மை கடவுளாக வெளிப்படுத்தினார். *ஷெமா* என்பது எபிரேயர்களின் அன்றாட செபமாக இருக்கிறது. அது, ‘‘இஸ்ரயேலே கேள், ஒரே கடவுளே இருக்கிறார்’’ என்று தொடங்குகிறது.

9. ***தந்தை.*** ‘‘தந்தை’’ என்பது இயேசு தாமே நமக்காக கடவுளுக்கு வழங்கியப் பெயராக இருக்கிறது. கடவுளைச் சுட்ட ‘‘தந்தை’’ என்றச் சொல்லைப் பயன்படுத்துவது இன்றையக் கிறிஸ்தவர்களிடம் பொதுவானதாக காணப்படும் நிலையில், திருச்சபையின் தொடக்கக் காலங்களில் இது ஒரு தனித்துவமான கருத்துருவாக இருந்தது. வேறெந்த சமயமும் மனிதருடன் இத்தகைய நெருக்கமான உறவுநிலைக்குள் கடவுளைக் கொணர, நம்மை கடவுளின் பிள்ளைகளாகக் கருதத் துணியவில்லை. பழைய ஏற்பாட்டு மக்கள் கடவுளின் பெயரைக்கூட அழைக்கவில்லை. கிறிஸ்தவர்களாக, கடவுளோடு கொண்டுள்ளதாக நாம் அறிக்கையிடும் இந்த உறவுநிலையின் தனித்துவத்தை, தனிச்சிறப்பை நாம் பற்றிக்கொள்ளத் தவறக்கூடாது.

*கதிம 239*: ‘‘கடவுளைத் ‘தந்தை’ என்று அழைப்பதால், இந்த விசுவாச மொழி இரண்டு முதன்மை விடயங்களைக் குறிக்கிறது: அனைத்தின் தொடக்க முதல்வராகவும் எல்லைகடந்த அதிகாரம் கொண்டவராகவும் கடவுள் இருக்கிறார்; மேலும் அதே நேரத்தில் தமது எல்லா பிள்ளைகள் மீதும் நன்மைத்தனமும் அன்பின் அக்கறையும் கொண்டவராக அவர் இருக்கிறார். கடவுளின் தந்தைக்குரியப் பரிவன்பை தாய்மைக்குரிய உருவமைவிலும் வெளிப்படுத்தலாம், கடவுளின் உள்ளியல்புக்கு, படைத்தவருக்கும் படைப்புயிரிக்கும் இடையிலான நெருக்கத்துக்கு அது அழுத்தம் கொடுக்கிறது. இவ்வாறு மனிதருக்கு ஒருவிதத்தில் கடவுளின் முதல் சுட்டமைவர்களாக (பிரதிநிதிகளாக) இருக்கின்றப் பெற்றோர்களின் மனித அனுபவத்தைச் சார்ந்ததாக விசுவாச மொழி இருக்கிறது. ஆனால் மனிதப் பெற்றோர்கள் தவறவும், தந்தைமை மற்றும் தாய்மையின் முகத்தைச் சிதைக்கவும் கூடியவர்கள் என்று இந்த அனுபவம் நமக்குச் சொல்கிறது. ஆகவே, பாலினங்களுக்கு இடையிலான மனித வேறுபாட்டைக் கடந்தவராக கடவுள் இருக்கிறார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அவர் ஆணோ பெண்ணோ அல்லர்: அவர் கடவுளாக இருக்கிறார். அவர்களின் தொடக்கமாகவும் தரநிலையாகவும் அவர் இருந்தாலும், அவர் மனிதத் தந்தைமையையும் தாய்மையையும் கடந்தவர்: எந்தத் தந்தையும் கடவுளைப் போன்று தந்தையாக இருப்பதில்லை.’’

10. ***எல்லாம் வல்லவர்.*** ‘‘எல்லாம் வல்லவராக’’ இருக்கிறார் என்பது வேறெதையும் வேறெவரையும் விட அவரது வல்லமை பெரிதாக இருக்கிறார் என்று மட்டும் குறிக்கவில்லை. அவரது வல்லமை ஒருங்கிய (பிரபஞ்ச) அளவிலானது என்றும் பொருள்படும், ஏனெனில் கடவுளே அனைத்தையும் படைத்தார், அனைத்தையும் ஆளுகின்றார், மேலும் அவரால் அனைத்தையும் செய்ய முடியும். அவர் எல்லாம் வல்லவராக இருந்தால், கடவுளால் செய்ய முடியாத எதுவும் உண்டா? அவரால் பொய்யுரைக்க அல்லது பாவம் செய்ய முடியுமா? இல்லை, அவரால் பொய்யுரைக்க அல்லது பாவம் செய்ய முடியாது என்று கடவுள் நமக்கு கூறுகிறார்; இது எளிதில் அவரது இயல்புக்கு எதிரானதாக இருக்கிறது. எல்லாம் வல்லவர் என்பதற்கு, கடவுள் செய்கிறதை செய்யாமல் தடுக்கும் பேராற்றல் எதுவும் இல்லை, மேலும் கடவுள் செய்ய விரும்பாததைச் செய்கின்ற பேராற்றலும் எதுவும் இல்லை என்று பொருள்.

*கதிம 268*: ‘‘எல்லா இறைப் பண்புகளிலும், கடவுளின் எல்லாம்வல்லத் தன்மை மட்டுமே நம்புகையில் பெயரிடப் பெற்றுள்ளது: நமது வாழ்வைப் பெரிதும் தாங்குவதால் இந்த ஆற்றல் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவரது வல்லமை ஒருங்கிய அளவானது என்று நாம் நம்புகிறோம், ஏனெனில் கடவுளே அனைத்தையும் படைத்தார், அனைத்தையும் ஆளுகின்றார், மேலும் அனைத்தையும் செய்யக் கூடியவராக இருக்கிறார். கடவுள் நமது தந்தையாக இருக்கிறதால், அவரது வல்லமை அன்புக்குரியது, மேலும் ‘வலுவின்மையில் நேர்த்தியாக்கப்பட்டுள்ள’ அதை விசுவாசம் மட்டுமே தெளிதேர்வு செய்ய முடியும் என்பதால், அது மறைபொருளானது.

11. ***விண்ணகமும் மண்ணகமும் படைத்தவர்.*** ‘‘விண்ணகமும் மண்ணகமும்’’ என்ற இந்த சொல்லாடலுக்கு, இருக்கின்ற அனைத்தும், படைப்பு அதன் முழுமையில் என்று பொருள். இது விண்ணகத்தையும் மண்ணகத்தையும் இணைக்கின்ற மற்றும் ஒன்றை மற்றதில் இருந்து வேறுபடுத்துகின்ற, படைப்பிற்குள்ளான ஆழ்ந்தப் பிணைப்பையும் குறிக்கிறது. மண்ணகம் என்பது மனிதர்களின் உலகமாகவும், விண்ணகம் என்பது கடவுளின் சொந்த இடமாகவும்

ஆவிக்குரியப் படைப்புயிரிகளின் - கடவுளைச் சூழ்ந்த வானதூதர்கள் மற்றும் புனிதர்களின் - இடமாகவும் இருக்கிறது. இந்த பரந்த காணப்படுகின்ற மற்றும் காணப்படாத ஒருங்கியம் உச்ச படைப்பாளரின் வேலையால் அன்றி இருக்கிறதற்குச் சாத்தியமில்லை.

12. ***காண்பவை காணாதவை யாவும்.*** இந்த பாடம் திருத்தூதர்களின் நம்புகையில் காணப்படவில்லை. தொடக்கக்காலத் திரிபுரைகள் சில, வேறுபட்ட ஆதிக்கங்களுக்கு வேறுபட்ட தெய்வங்கள் பொறுப்பாக - இயற்கைக்கு மேலானவற்றுக்கு (காணப்படாதவைக்கு) ஒரு நல்ல தெய்வமும், இயற்கையானவற்றுக்கு (காணப்படுகிறவைக்கு) ஒரு தீய தெய்வமும் உள்ளதாக நம்பின. ‘‘காண்பவை காணாதவை யாவும்’’ என்று அறிவிப்பதன் வழியாக, காணப்படுகிற மற்றும் காணப்படாத மெய்மங்கள் இரண்டும் அதே ஒரே படைப்பாளரால் படைக்கப்பட்டன என்பதை இந்த நம்புகை வலியுறுத்துகிறது.

13. ***ஒரே ஆண்டவரை நம்புகின்றேன்.*** இயேசுவின் காலத்தில் ‘ஆண்டவர்த்துவம்’ என்பது முழுமையான, கேள்விக்கிடமற்ற உரிமைத்துவம் ஆகும். ‘‘ஆண்டவர்’’ என்று அழைக்கப்பட்ட நபர், ஒரு முழுமையான, கேள்விக்கிடமற்றத் தலைவராக இருந்தார். புதிய ஏற்பாடு ஊடெங்கும், இயேசுவோடு பேசியவர்கள், அவரை இன்னும் நம்பாதவர்கள், ‘போதகர்’’ அல்லது ‘‘ரபி’’ போன்ற மாண்புடையப் பட்டங்களால் அவரைக் குறிப்பிட்டனர். ‘‘ஆண்டவர்’’ மற்றும் ‘‘தலைவர்’’ என்றப் பட்டங்களை, அவரை உண்மையில் நம்பியவர்களான, அவரது சீடர்களும் திருத்தூதர்களும் மட்டும் பயன்படுத்தினர். இதன் காரணமாகவே மாற்கு 4:45ல், இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த யூதாசு, இயேசுவை ‘‘ஆண்டவர்’’ எனாமல் ‘‘ரபி’’ என்று அழைக்கிறான். இயேசுவை ‘‘ஆண்டவர்’’ என்று நாம் அறிக்கையிடுவதன் வழியாக, அவரது சீடர்களைப் போன்றே, நமது வாழ்விலும் அவர் கேள்விக்கிடமற்றத் தலைவராகவும், வழிபடத் தகுந்தவராகவும் இருக்கிறார் என்பதை நாம் குறிப்பால் உணர்த்துகிறோம்.

14. ***இயேசு கிறிஸ்து.*** *யெசுவ்* என்ற எபிரேயப் பெயரில் இருந்து வருகின்ற ‘‘இயேசு’’ என்பதற்கு ‘‘ஆண்டவர் மீட்கிறார்’’ என்று பொருள். கடவுளின் மகன் மனிதரான பொழுது, அவருக்கு மனிதப் பெயர் வழங்கப்பட்டது தனிச்சிறப்புக்கு உரியது. இது அவரது மனிதத் தன்மையை வெளிக்காட்டுகிறது. இயேசு முழுமையாக மனிதராகவும், முழுமையாக கடவுளாகவும் இருக்கிறார். நாம் அவரை ‘‘இயேசு கிறிஸ்து’’ அழைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மெய்மையில், ‘‘கிறிஸ்து’’ என்பது அவரது குடிப்பெயர் அன்று! ‘‘கிறிஸ்து’’ என்றால் ‘‘திருப்பொழிவு பெற்றவர்’’. பழைய ஏற்பாட்டில், குருக்கள், இறைவாக்கினர்கள், மற்றும் அரசர்கள் ஆகியோர் கடவுளால் தேர்வு செய்யப்பட்டதன் அடையாளமாக எண்ணெய்யால் திருப்பொழிவு செய்யப்பட்டனர். தமது திருமுழுக்கில், இயேசு திருப்பொழிவு செய்யப்பட்டார், எண்ணெய்யால் அன்று, மாறாக அவர்மீது புறாவைப் போல இறங்கி வந்த தூய ஆவியாரால்.

15. ***கடவுளின் ஒரே பேறான மகன்.*** ‘‘கடவுளின் ஒரே பேறான மகன்’’ என்பது கடவுளுடனான இயேசுவின் உறவுநிலை நம்முடையதில் இருந்து வேறுபட்டுள்ளதைக் காட்டுகிறது. இயேசு உண்மையில் மனிதராகவும் கடவுளாகவும் இருக்கிறார். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் ஊடெங்கும், இரண்டு சிறப்பு பட்டங்கள் இயேசுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன – ‘‘மானிட மகன்’’ மற்றும் ‘‘கடவுளின் மகன்’’.

16. ***கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, உண்மை கடவுளினின்று உண்மை கடவுளாகப் பேறானவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர்.*** இந்த சொற்றொடர் நான்காம் நூற்றாண்டு ஆரியத் திரிபுரையின் நேரடி விளைவாகச் சேர்க்கப்பட்டது. ‘‘நித்தியமாகப் பேறானவர்’’ என்று நீங்கள் கேட்கும் பொழுது, ஒருவர் எதிர்கால நித்தியம் பற்றிச் சிந்திக்க வாய்ப்புண்டு, ஆனால் நித்தியம் என்பது பின்னோக்கியும் நீளும்! இயேசு, கடவுளாக, தொடக்கத்திற்கு முன்பிருந்தே இருந்துள்ளார். மனிதர்களாக, தொடர்ச்சியுறு காலத்தின் மெய்மத்தில் வாழும் நமக்கு இது புரிந்துகொள்ளக் கடினமான ஒரு கருத்துருவாக இருக்கிறது. ‘‘வாக்கானவர் நித்தியமானவர் அல்லர். கடவுளே அவரைப் பேறாக்கினார், அவர் பேறாவதற்கு முன்பு, அவர் இருக்கவில்லை’’ என்பதே ஆரியுஸின் படிப்பினை.
இதன் பொருள் என்னவெனில், வாக்கானவர் இல்லாத ஒரு காலம் இருந்தது. சங்கத்தில் இளம் திருத்தொண்டராக இருந்த புனித அத்தனாசியுஸ், இந்த விடயத்தில் திருச்சபையின் சரியானப் படிப்பினையைத் தற்காக்க கடினமாகப் போராடினார், ‘‘வாக்கானவரைப் பேறாக்குதல்

என்பது காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்வன்று, அது ஒரு நித்திய உறவுநிலை'' என்பது ஆரியுசுக்கு அவரது பதிலாக இருந்தது.

17. **தந்தையோடு ஒரே பொருள்மமானவர்.** நிசேயா நம்புகைக்கான சரியான சொற்களை உருவாக்கும் பொழுது, பின்வரும் இரண்டு சொற்களில் எதைப் பயன்படுத்துவது என்பதில் பெரும் விவாதம் எழுந்தது. இந்த சங்கத்தில் இயேசுவின் உண்மை இறைத்தன்மையைத் தற்காத்தவர்கள் தந்தையுடன் *ஹோமோவ்சியோன் தோ பாத்ரி* என்றப் பதத்திற்காகப் போராடினர், இதைத் தமிழில் ''தந்தையோடு ஒரே பொருள்மம் கொண்டவர்'' என்று மொழிபெயர்க்கலாம். ஆரியுஸை ஆதரித்தவர்கள், ''தந்தைக்கு நிகரானப் பொருள்மம் கொண்டவர்'' என்று இரட்டுறலாகப் பொருள்தரும் *ஹோமோயூசியோன் தோ பாத்ரி* என்ற சொற்றொடருக்குச் சார்பாக இருந்தனர். *ஹோமோவ்சியோன் தோ பாத்ரி* மற்றும் *ஹோமோயூசியோன் தோ பாத்ரி* என்ற இரு சொற்றொடர்களுக்கு இடையிலான வேறுபாடு கிரேக்க எழுத்தான ஐயோட்டாவில் (''i'') இருக்கிறது. ''ஒரு ஐயோட்டாவைச் சேர்க்கவும் மறுக்கின்றனர்'' என்றச் சொற்றொடர் வருகிறது இங்கிருந்தே!

18. ***இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன.*** இது யோவான் 1:3ல் இருந்து நேரடியாக எடுக்கப்பட்ட மேற்கோள். இந்த கூற்றுக்கு, மகன் ஒரு படைப்புயிரி அல்லர் என்பது பொருள். மாறாக, அவர் படைப்பாளராக இருக்கிறார், படைக்கப்பட்ட எல்லாமுமே உருவாவதற்கு வழியாக இருந்த முகவர் இவரே.

19. ***மனிதரான நமக்காகவும் நமது மீட்புக்காகவும் விண்ணகத்திலிருந்து இறங்கினார்.*** இயேசு, மனிதரானதில், மனிதகுலத்தின் பாவங்கள் மன்னிக்கப்படவும், கடவுளோடு ஒப்புரவாகவும் தமது வாழ்வையே பலியாக்கினார். கல்வாரியில் சிலுவை மீது அவர் ஒரேமுறை முழுமையாகச் செலுத்தியப் பலி வழியாக மீட்பைக் கொணர்ந்தார். அவரது பலிக்கும் விண்ணேற்றத்துக்கும் முன்னதாக, கடவுளுடனான நித்திய ஒன்றிப்பில் நுழைவது சாத்தியமற்றதாக இருந்தது.

20. ***தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடலெடுத்து மனிதரானார்.*** கிறிஸ்தவ விசுவாசத்தின் முதல் உருவாக்கத்தில் இருந்தே, இயேசு தூய ஆவியாரின் வல்லமையால் மட்டுமே கன்னி மரியாவின் கருப்பையில் கருவானார் என்று கூறுகிறது, மேலும் இந்நிகழ்வின் உடல்சார் அம்சத்தையும் அறிவிக்கிறது: ''மனித வித்தின்றி தூய ஆவியாரால்'' இயேசு கருவானார். இந்த கன்னிக் கருவுறுதலை நம்மைப் போன்று மனிதராக வந்தவர் உண்மையில் கடவுளின் மகனாக இருந்தார் என்பதற்கான அடையாளமாகத் திருச்சபை காண்கிறது. தூய ஆவியாரின் மாபெரும் செயல் இந்த உடலேற்பு நிகழச் செய்ததாகும்: இயேசுவின் கருவாதல் மற்றும் பிறப்பு. இந்த உச்ச அருள், ஒன்றிப்பின் அருளாக இருக்கிறதால், அது மற்ற அனைத்து அருளின் ஆதாரமாக இருக்கிறது. உடலேற்பின் வழியாக, பாவத்தால் பிளவுபட்ட மனித மற்றும் இறை ஒன்றிப்பு மீண்டும் நிகழ்ந்தது.

21. ***நமக்காக பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.*** திருத்தூதர்களின் நம்புகையில் உள்ளதோடு ''நமக்காக'' என்பது சேர்க்கப்பட்டுள்ளது. இங்கு அழுத்தமாகக் கூறப்படுவது, அவரது பலி முழுமையாக நமக்கானது மற்றும் முழுமையாக அவரது வல்லமைக்குள் வழங்கப்படுகின்றது. அடையாளப் பூர்வமாக, பிலாத்து எல்லா மனிதரையும் சுட்டி நிற்கிறார், ஏனெனில் மனிதகுலமே பாவத்தின் வழியாக இயேசுவின் பாடுகள் மற்றும் இறப்புக்குக் காரணமாக இருந்தது.

இயேசு ஏன் சிலுவையில் அறையப்பட்டார், மேலும் வேறொரு விதத்தில் சாவுக்கு உட்படுத்தப் படவில்லை? சிலுவையில் அறையப்படுதல் என்பது - இது நீண்ட வலிதரும் என்ற உண்மையினால் மட்டுமன்று, மோசமானக் குற்றவாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட பொது இழிவு என்பதாலும் சாத்தியமான மோசமான இறப்பாகக் கருதப்படுகிறது.

22. ***மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.*** இயேசுவின் உயிர்த்தெழுதல் நமது கத்தோலிக்க விசுவாசத்தின் மையமாக இருக்கிறது. ''அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார்'' என்று கூறுவதில், இயேசு தமது சொந்த வல்லமையால் இறந்தோரிடம் இருந்து உயிர்த்தார் என்பதைத் திருச்சபை அறிவிக்கிறது. இறந்துபோன மற்றும் இறக்கப் போகின்ற எல்லா மனிதர்களும் விண்ணகத்தில் நுழைய உயிர்த்தெழுவர், ஆனால் தங்கள் சொந்த வல்லமையால் அன்றி, கடவுளின் வல்லமையால் உயிர்த்தெழுவர்.

23. ***மறைநூல்களின் படியே.*** இந்தச் சொற்றொடர் 1 கொரிந்தியர் 15:4ல் இருந்து வருகிறது. தம்மைச் சுட்டிய பழைய ஏற்பாட்டு மறைநூல்கள் எல்லாவற்றையும் நிறைவுக்குக் கொணர்வதற்காக இயேசு வந்தார்.

24. ***விண்ணகத்துக்கு எழுந்தருளி, தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார்.*** இந்த சொற்றொடர் நேரடியாக மாற்கு 16:19 மற்றும் யோவான் 20:17ல் இருந்து வருகிறது, மேலும் விடுதலைப்பயணம் 13:22 மற்றும் திருப்பாடல் 110:1ல் உள்ள பழைய ஏற்பாட்டு இறைவாக்கை நிறைவேற்றுகிறது. தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கிறது என்பது மெசியாவின் அரசு நடைபெறுகிறதைக் குறிக்கிறது. திருத்தூதர்கள், இயேசுவின் சீடர்களாகிய நம் எல்லாரோடும் ஒருசேர, முடிவுறாத இந்த அரசின் அறிவிப்பாளர்களாக இருக்கிறார்கள்.

25. ***வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட மாட்சியுடன் மீண்டும் வரவிருக்கின்றார்.*** இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக, பல நம்பிக்கையாளர்களின் விசுவாசத்தை அசைக்கும் இறுதிச் சோதனையின் ஊடாகத் திருச்சபை கடந்திட வேண்டும் (லூக்கா 18:8 மற்றும் மத்தேயு 24:12). இந்த இறுதிச் சோதனை வழியாக மட்டுமே அரசின் மாட்சிக்குள் திருச்சபை நுழையும். கட்டவிழ்ந்த தீமை மீதான கடவுளின் இறுதி வெற்றி முழுமையாகவும் நிறைவாகவும் இருக்கும், மேலும் இறுதித் தீர்ப்பில் அது உச்சம் தொடும்.

26. ***அவரது ஆட்சிக்கு முடிவு இராது.*** படைப்பின் மீதான கிறிஸ்துவின் ஆட்சி ஒருபோதும் முடிவுறாது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, அவர் என்றென்றைக்கும் அரசராக இருப்பார், சாத்தானின் வல்லமை அவர்மீது ஒருபோதும் வெற்றி கொள்ளாது. இரண்டாவதாக, கிறிஸ்துவால் ஆளப்படுகின்றப் படைப்பும், ஒருபோதும் முடிவைக் காணாது. ‘‘உலகின் முடிவு’’ குறித்து மக்கள் பலர் பொதுவாகப் பேசினாலும், அது உண்மையற்ற கருத்தாக இருக்கிறது. இந்த உலகம் தற்போதைய வீழ்ச்சியுற்ற வடிவில் முடிவுறும், ஆம், ஆனால் இயேசு அதைப் புதுப்பிப்பார், அவரது வருகையின்போது அதை நிறைவுக்கு கொணர்வார், இந்த ஒருங்கியம் முழுவதுமே என்றென்றும் இருக்கும். கடவுள் பொருள்களைப் படைத்தது அவற்றை அழிப்பதற்கோ, அவற்றைத் தூக்கியெறியவோ அல்ல.

27. ***ஆண்டவரும் உயிரளிப்பவருமான தூய ஆவியாரையும் நம்புகின்றேன்.*** மகனும் தூய ஆவியாரும் ‘‘ஆண்டவர்’’ என்று அழைக்கப்படுவதைக் கவனியுங்கள். இது பழைய ஏற்பாட்டில் கடவுளைக் குறிக்கும் பதம். தந்தை, மகன் மற்றும் தூய ஆவியார் ஆகியோர் ஒரே கடவுளின் மூன்று ஆட்களாக இருக்கின்றனர்.

தூய ஆவியார் இரண்டு விதங்களில் ‘‘வாழ்வு அளிக்கிறவராக’’ இருக்கின்றார். முதலாவதாக, கடவுள் நம்மைப் படைத்த பொழுது அவர் மனிதர்களுக்கு உயிர் (சுவாசம்) கொடுத்தார் (தொநூ 2:7). இரண்டாவதாக, பாவங்களை மன்னிக்கிறதன் வழியாக அவர் நமக்கு புது வாழ்வு தருகின்றார் (யோவா 20:21-23).

28. ***தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படுகின்றார்.*** தந்தை, மகன், மற்றும் தூய ஆவியார் என கடவுள் ஒருவரில் மூவராக இருக்கிறார் என்று திருச்சபை கற்பிக்கிறது. தந்தை மற்றும் மகனிடம் இருந்து தூய ஆவியார் புறப்படுகிறார் அல்லது வருகிறார் என்று மறைநூல் சான்று பகர்கிறது. யோவான் 15:26ல், இயேசுவின் பெயரால் பரிந்துரையாளர் (துணையாளர்) அல்லது தூய ஆவியார் தந்தையால் அனுப்பப்படுவார் என்று இயேசு கூறுகிறார். யோவான் 16ல், இயேசு தாமே தூய ஆவியாரை அனுப்புவது குறித்து பேசுகிறார், மேலும் உரோமையர் 8:9ல் கிறிஸ்துவின் ஆவியார் என்று தூய ஆவியார் சுட்டப்படுகிறார்.

29. ***இவர் தந்தையோடும் மகனோடும் ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார்.*** தந்தை மற்றும் மகனைப் போன்றே, தூய ஆவியாரும் வழிபாட்டுக்கும் ஆராதனைக்கும் தகுதியானவர், ஏனெனில் அவர் தந்தை மற்றும் மகனுக்குச் சமநிலையில் இருக்கின்றார்.

30. ***இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே.*** தொடக்கத் திருச்சபையில் சிலர், பெந்தக்கோஸ்துக்கு முன்னர் தூய ஆவியார் இந்த உலகில் செயலாற்றவில்லை என்றப் பார்வை கொண்டிருந்தனர், ஆனால் இப்பார்வை சரியானதன்று. கடவுளின் மனதின்படி பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்கள் பேசுவதற்கான அருளும் துணிவும் வழங்கியவர் தூய ஆவியாரே.

31. ***ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதரியத் திருச்சபையை நம்புகின்றேன்.*** இயேசு கிறிஸ்துவின் உண்மை திருச்சபையாகக் கத்தோலிக்கத் திருச்சபை இருக்கிறது, ஏனெனில்

அது நான்கு குறியீடுகளைக் கொண்டுள்ளது: ஒருமை, தூயநிலை, கத்தோலிக்கம், மற்றும் திருத்தூதரியம். அது ஒன்றாக இருக்கிறதற்குக் காரணம் இயேசு ஒரே ஒரு திருச்சபையை நிறுவினார், மேலும் திருச்சபையின் உறுப்பினர்கள் எல்லாரும் இந்த ஒரே திருச்சபையால் அறிவிக்கப்படும் உண்மையைப் பகிர்ந்து கொண்டுள்ளதால், அவர்கள் ஒருசேரப் பிணைக்கப் பெற்றுள்ளனர். அது தூயவரான கிறிஸ்துவோடு ஒன்றித்துள்ளதால் தூயதாக இருக்கிறது (எனினும் திருச்சபையின் மனித உறுப்பினர்கள் பாவமற்றவர்கள் என்பது இதன் பொருளன்று). அது கத்தோலிக்கமாக இருக்கிறது, ஏனெனில் அது உலகளாவியதாகவும் உலகின் எல்லா இடங்களிலும் போதிக்கப்படுகிற நற்செய்தியை அறிவிக்கிறதாகவும் இருக்கிறது. அது திருத்தூதரியமாக இருக்கிறது, ஏனெனில் அது கிறிஸ்துவின் திருத்தூதர்களின் திருப்பணி மீது அடித்தளமிடப் பெற்றுள்ளது, மேலும் அந்த உண்மை திருத்தூதர்களின் வழிவந்தவர்களால் தொடர்ந்து ஆளப்படுகிறது.

32. ***பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக்கொள்கின்றேன்.*** விசுவாசம் மற்றும் திருமுழுக்கு அருளடையாளத்தோடு பாவங்களின் மன்னிப்பை நம் ஆண்டவர் கட்டியுள்ளார். நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெறுவோர் மீட்பு அடைவர் என்று அவர் வாக்களித்தார் (மாற் 16:15-16). பாவங்களின் மன்னிப்புக்கான முதல் மற்றும் தலைமை அருளடையாளமாக திருமுழுக்கு இருக்கிறது. தொடக்கப் பாவம் உள்பட, எல்லா பாவங்களையும் திருமுழுக்கு நீக்குகிறது, மேலும் நாம் கடவுளின் குடும்பத்தில் ஒருவர் என்று உணர்த்தும் அழியாத முத்திரையை நமது ஆன்மாவில் பதிக்கிறது. அவரது குடும்ப உறுப்பினர்களாக, எப்பொழுதும் நாம் அவரை அணுகவும், அவரது மன்னிப்பைக் கேட்கவும் முடியும்.

33. ***இறந்தோரின் உயிர்ப்பை எதிர்பார்க்கின்றேன்.*** இறந்தோரின் உயிர்த்தெழுதலை நம்புவது தொடக்கத்தில் இருந்தே கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியக் கூறாக இருந்துள்ளது. முதலில் இயேசுவே வாழ்வுக்கு உயிர்த்தார், ஆனால் அத்தகைய நம்பிக்கை பழைய ஏற்பாட்டிலேயே வேரூன்றியுள்ளது: ‘‘இறந்தபின் என்றென்றும் வாழுமாறு, உலகத்தின் அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்’’ (2மக் 7:9).

34. ***வரவிருக்கும் மறுவுலக வாழ்வை எதிர்பார்க்கின்றேன்.*** மீட்படைய விரும்புவோருக்கு ‘‘வரவிருக்கும் உலகாக’’ விண்ணகம் இருக்கிறது. இது நமது மூத்த சகோதரர் இயேசுவோடு நாம் பகிர்ந்து கொள்ளும் நமது பேறுரிமையாகும். மற்ற எந்தப் பேறுரிமையைப் போன்றே, நாம் அதை ஈட்ட முடியாது; இது ஒரு இலவசக் கொடையாக இருக்கிறது. எவ்வாறெனினும், இந்தப் பேறுரிமைக்குத் தகுதியானவர் என்பதை ஒரு வாரிசு எண்பிக்க வேண்டும், அல்லது அது மறுக்கப்படலாம். ஆகவே, நமக்கு வாக்களிக்கப்பட்ட இந்த பேறுரிமையை நாம் பெற நமது கிறிஸ்தவ வாழ்வில் கடவுளோடு நாம் ஒத்துழைப்பது தேவையாகிறது.

35. ***ஆமென்.*** ‘‘ஆமென்’’ என்பது இணங்கலுக்கான உறுதிமொழி ஆகும். திருவெளிப்பாட்டு நூலின்படி, இயேசுவே ஆமெனாக இருக்கிறார் (திவெ 3:14).

*கதிம 1061*: ‘‘இந்த நம்புகை, விவிலிய நூலின் இறுதி நூலைப் போன்று, *ஆமென்* என்ற எபிரேயச் சொல்லோடு முடிகிறது. இந்த சொல் பெரிதும் புதிய ஏற்பாட்டு செபங்களை முடித்து வைக்கிறது. அவ்வாறே திருச்சபையும் தனது செபங்களை ‘ஆமென்’ என்பதோடு முடிக்கிறது.

*கதிம 1062*: ‘‘எபிரேயத்தில், *ஆமென்* என்பது ‘நம்புதல்’ என்றச் சொல்லுக்கான அதே வேரில் இருந்து வருகிறது. இந்த வேர்ச்சொல் திடத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைச் சுட்டுகிறது. ஆகவே நமக்கான கடவுளின் நம்பகத்தன்மை மற்றும் அவருக்கான நமது நம்பகத்தை ‘ஆமென்’ ஏன் வெளிப்படுத்துகிறது என்று நாம் புரிந்துகொள்ளலாம்.’’

*கதிம 1063*: ‘‘இறைவாக்கினர் எசாயாவின் நூலில், நாம் ‘உண்மையின் கடவுள்’ (நேர் சொற்படி: ‘‘ஆமெனின் கடவுள்’’), என்றச் சொல்லாடலைக் காண்கிறோம், அதாவது, தமது வாக்குறுதிகளுக்கு நம்பகமான கடவுள்: ‘மண்ணகத்தில் தமக்குத்தாமே ஆசி வழங்குகிறவர், உண்மையின் (ஆமென்) கடவுளால் தமது ஆசியைப் பெறுவார்.’ நம் ஆண்டவர் அடிக்கடி ‘ஆமென்’ என்றச் சொல்லைப் பயன்படுத்தினார், தமது படிப்பினையின் நம்பகத்தன்மையையும், கடவுளின் உண்மை மீது தமது அதிகாரத்தின் அடித்தளம் உள்ளதையும் வலியுறுத்த, சில நேரங்களில் அதைத் திரும்பத்திரும்பப் பயன்படுத்தினார்.’’

*கதிம 1064*: ‘‘இவ்வாறு நம்புகையின் இறுதி ‘ஆமென்’ அதன் முதல் சொற்களைத் திரும்ப உறுதிசெய்கிறது: ‘நம்புகின்றேன்’. நாம் நம்புவதற்கு கடவுளின் வார்த்தைகள், வாக்குறுதிகள் மற்றும் கட்டளைகளுக்கு ‘ஆமென்’ சொல்ல வேண்டும்; முடிவில்லா அன்பும் நிறைவான நம்பகத்தன்மையும் கொண்ட ‘ஆமென்’ என்ற அவரிடம் ஒருவர் தம்மை முழுமையாக ஒப்படைக்க வேண்டும். பிறகு நமது திருமுழுக்கின் விசுவாச அறிக்கைக்கு, கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்வு ‘ஆமென்’ என்பதாக இருக்கும்.

36. ஞாயிற்றுக்கிழமை அல்லது ஒரு முக்கிய விழாவன்று கொண்டாடப்படும் ஒவ்வொரு திருப்பலியிலும், வார்த்தை வழிபாட்டின் பொழுது, மறையுரைக்குப் பதிலிறுக்கும் விதமாக அவையோர் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றனர், அதாவது, திருச்சபையின் நம்புகையைக் கூறுகின்றனர். இயேசுவின் உடலேற்புக்கு மரியாதை அளிக்க, ‘‘இவர் தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடலெடுத்து மனிதரானார்’’ என்ற வாக்கியத்திற்கு நாம் குனிந்து தலைவணங்குகிறோம். உடலேற்பைக் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு மற்றும் கிறிஸ்து பிறப்பு ஆகிய விழாக்களின் பொழுது, இந்த வாக்கியத்திற்கு உண்மையில் நாம் முழந்தாளிடுகிறோம்.

37. திருச்சபையின் நம்புகைகள் நமக்கு வெறும் வாக்கியங்களின் தொடர்களாகத் தெரியலாம், ஏனெனில் எந்த விலையும் கொடுக்காமலே இந்த நம்புகைகள் நம்மில் பலருக்கு வந்து சேர்ந்துள்ளன. ஆனால் இந்த நம்புகைகளில் காணப்படும் விசுவாசத்தின் தற்காப்புக்காக தொடக்கக் கிறிஸ்தவர்கள் கொடூரமாகத் துன்புற்றனர் என்பதை நினைவுகூர்வது முக்கியம்.

கிறிஸ்தவர்களுக்கு எதிரான ரோமைப் பேரரசின் துன்புறுத்தல்கள், கி.பி. 313ல் ரோமைப் பேரரசர் கொன்ஸ்தாந்தீன் மனந்திரும்பிய பொழுதுதான் முடிவுக்கு வந்தன. மைப்பர்காட்டின் மருத்தா என்ற சிரிய எழுத்தாளரின் வரலாற்றுத் தொகைவின்படி, நிசேயாவில் முதல் பொதுச் சங்கத்திற்காக (இதில்தான் நிசேயா நம்புகை முதலில் உருவாக்கப்பட்டது) 318 திருச்சபைத் தலைவர்கள் கூடியிருந்த பொழுது, அவர்களில் பலர் பெரும் துன்புறுத்தலைத் தாங்கியவர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. 318 ஆயர்களில், 11 பேர் மட்டுமே துன்புற்றதன் வடுக்களின்றிக் காணப்பட்டனர். இந்த மனிதர்களின் முகங்களிலும் உடல்களிலும் இருந்த வடுக்களைக் கண்டு பேரரசர் திகைத்தார். தாம் ஒரு மனிதரிடம் இருந்து அடுத்தவரிடம் கடந்து சென்று, ‘‘அவர்களின் உடல்களில் இருந்த கிறிஸ்துவின் வடுக்களை’’ தலை வணங்கி முத்தமிட்டதாக மருத்தா கூறுகிறார், இந்தத் தழும்புகள் அவர்களின் விசுவாசத்துக்கு சான்று பகர்கின்றன. வந்திருந்த எல்லா ஆயர்களும் (11 பேரைத் தவிர) அந்த துன்புறுத்தல்களில் ஏறக்குறைய ஊனமாக்கப்பட்டிருந்தனர். சிலருக்கு கண்கள் தோண்டி எடுக்கப்பட்டிருந்தன; சிலருக்கு காதுகள் அறுக்கப்பட்டிருந்தன. சிலருக்குப் பற்கள் வேரோடு பிடுங்கப்பட்டிருந்தன. சிலருக்கு கைகள் மற்றும் கால்களின் விரல்களில் நகங்கள் பிய்த்தெறியப்பட்டிருந்தன; சிலர் வேறுவிதங்களில் உறுப்புச் சிதைக்கப்பட்டிருந்தனர். ஆனால் மராஷின் ஆயர் தாமஸ், ஒரு திகிலூட்டும் பொருளாகக் காணப்பட்டார்; அவரது கண்கள், மூக்கு மற்றும் உதடுகள் சிதைக்கப்பட்டிருந்தன; அவரது பற்கள் பிடுங்கப்பட்டிருந்தன, மேலும் அவரது கால்களும் கைகளும் வெட்டப்பட்டிருந்தன. அவர் அர்மேனியர்களால் 22 ஆண்டுகள் சிறைவைக்கப் பெற்றிருந்தார், அவர்கள் அவரை இறைநிந்தைக்குத் தூண்டும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் சில உறுப்புகளைச் சிதைத்துள்ளனர், ஆனால் நம்பிக்கையாளர்களின் மாட்சிக்காகவும், திரிபுரையாளர்களின் இரக்கமின்மையை வெளிப்படுத்தவும் இந்த அச்சுறுத்தலானப் போட்டியில் அவர் வெற்றி பெற்றார். தந்தையர் அவரைத் தங்களோடு இந்த சங்கத்துக்குத் தூக்கி வந்திருந்தனர், அரசர் அவரைக் கண்டபோது, தரையில் பணிந்து வீழ்ந்து, ‘‘பல மகுடங்களை அணிந்துள்ள கிறிஸ்துவின் மறைச்சாட்சியே, நான் உங்களுக்கு மரியாதை செலுத்துகிறேன்’’ என்று கூறி அவரை வணங்கினார்.

38. நான்காம் நூற்றாண்டு திருச்சபையின் வரலாற்றில் மிகவும் ஆபத்தானத் திருப்பங்களில் ஒன்றாக, எரிகல் போல எழுந்தது ஆரியத் திரிபுரை ஆகும். எகிப்தின் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த குரு ஆரியுஸ், மகன் ‘‘தந்தையிடம் இருந்து பேறானவர்’’ என்பதால், அவர் கடவுளின் ஒரு படைப்பாக இருந்தார், அவர் உண்மையில் கடவுள் அல்லர். அவர் கடவுளின் படைப்புகளில் சிறந்தவர், கடவுளுக்கு அடுத்ததாக உள்ளவர், ஆனால் அவர் கடவுள் அல்லர் என்றக் கோட்பாட்டை முன்வைத்தார். உண்மையில், ஆரியுஸ் திரித்துவக் கோட்பாட்டை இவ்வாறு அழித்து, இயேசுவை கடவுளில் இருந்து கடவுளுக்குப் பணியாற்றும் படைப்புயிராகக் குறைத்தார். இந்த கோட்பாடு மேலோங்கி இருந்தால், தவிர்க்க இயலாதவாறு கிறிஸ்துவின் மையநிலையைத் தாழ்த்தி, ஒற்றைய விசுவாசத்திற்குள் கிறிஸ்தவத்தை உருமாற்றியிருக்கும்.

பொதுச் சங்கங்களில் முதலாவதாக கி.பி. 325ல் கூடிய நிசேயா சங்கத்தில் அணுகப்படும் வரை ஆரியுஸின் கோட்பாடு பரவிக் கொண்டிருந்தது. ஆரியவாதத்தை அணுகவே குறிப்பாக அழைக்கப்பட்ட இந்த சங்கம், நிசேயா நம்புகை குறித்துக்காட்டும் விசுவாசத்தை உறுதி செய்யும்படி ஆரியவாதத்தை ஐயத்திற்கிடமின்றிக் கண்டித்தது.

ஆரியவாதம் கண்டிக்கப்பட்டது, ஆனால் அழிக்கப்படவில்லை. நூற்றாண்டுகளாக நீடித்திருந்த ஆரியவாதத்துடன் தீவிரப் போராட்டத்திற்குள் திருச்சபை அப்போதுதான் நுழைந்திருந்தது. கி.பி. 336ல் ஆரியுஸ் இறந்தார், ஆனால் அவர் ஒரு வலிமையான வளரும் இயக்கத்தைத் தமக்குப்பின் விட்டுச் சென்றார். தமது திரிபுரையின் செல்வாக்குள்ளத் தலைவராக ஆரியுஸ் இருந்தார், தமது படிப்பினைகளைப் பரப்பும் பல புகழ்பெற்றப் பாடல்களையும் எழுதியிருந்தார். ஆரியுஸ் இறந்து ஓராண்டுக்குப் பிறகு, கொன்ஸ்தாந்தீன் இறந்தார். அவரது மகன் கொன்ஸ்தாந்தியுஸ் கிழக்குப் பேரரசில் அதிகாரத்தைக் கைப்பற்றி 2ம் கொன்ஸ்தாந்தியுஸ் என்றப் பெயரில் ஆட்சி செய்தார். கி.பி. 361 வரை ஆட்சியிலிருந்த அவர் ஆரியவாதிகளுக்கு சாதகமாக இருந்தார். அவரது ஆதரவோடு, கிழக்கு ரோமைப் பேரரசில் ஆரியவாதிகளே பெரிதும் திருச்சபையைக் கட்டுப்படுத்தினர். எவ்வாறெனினும், ஆரியவாதம் எதிர்காலத்தின் தவிர்க்க முடியாத அலையாக இருக்கும் என்பதை மறுத்து உண்மையை ஏற்ற ஒரு மனிதர் இருந்தார்: அத்தனாசியுஸ்.

எகிப்தின் அலெக்சாந்திரியாவில் கி.பி. 293க்கும் 296க்கும் இடையே பிறந்த அத்தனாசியுஸ், இளைஞராக இருந்தபோது ஆரியவாதம் அலெக்சாந்திரியாவில் பிறந்து கிழக்கில் எங்கும் பரவியதைக் கண்டார். அவர் அலெக்சாந்திரியாவின் மறைமுதுவர் அலெக்சாந்தரால் கி.பி. 319ல் திருத்தொண்டாகத் திருநிலைப்படுத்தப் பெற்றார். கி.பி. 320ல் அலெக்சாந்தரின் கீழ் அலெக்சாந்திரியாவில் நடைபெற்ற மன்றம் ஆரியவாதத்தைக் கண்டித்தது. நிசேயா சங்கத்தில் அலெக்சாந்தரின் செயலராக அத்தனாசியுஸ் பணியாற்றினார். விரைவில் சங்கத்துக்குப் பிறகு கி.பி. 328ல் அலெக்சாந்தர் இறக்க, அவரது இடத்தில் அத்தனாசியுஸ் மறைமுதுவரானார்.

அத்தனாசியுஸ் விரைவில் தம்மை ஆரியவாதிகளோடு சமரசம் செய்யாதவராக நிறுவிக் கொண்டார். தங்களது வளரும் வலிமையின் அடையாளமாக, கி.பி. 335ல் தீரில் நடைபெற்ற மன்றத்தில், அத்தானாசியுஸ் மீது ஓர் ஆயரின் கொலை உள்பட நீண்டப் பட்டியலின் “குற்றங்களை” சுமத்திய ஆரியவாதிகள், அவரை மறைமுதுவர் பதவியிலிருந்து அகற்றினர். கி.பி. 335 முதல் 366 வரை புனித அத்தனாசியுஸ் அலெக்சாந்திரியாவில் இருந்து நான்கு முறை நாடுகடத்தப்பட்டார். ஆரியவாதத்திற்கு எதிரான அவரது போராட்டங்களில், அவரது வேதனைகளின் ஊடெங்கும் அவர் காலத்து திருத்தந்தையர் மற்றும் மேலைத் திருச்சபை முழுவதிடம் இருந்து அவருக்கு ஆதரவு கிடைத்தது. அவர் ஆரியவாதிகளுக்கு எதிராகவும், தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான உறவுநிலை மற்றும் மகனின் உடலேற்பு ஆகியவைப் பற்றியத் திருச்சபையின் கோட்பாட்டைத் தெளிவுபடுத்தவும் அவர் குறிப்பிடத்தக்க உரைகளை எழுதினார். ஆளுகின்ற அரசோடு இணைந்த வலுவானத் திரிபுரை இயக்கத்துக்கு எதிராகப் போராடி, கிழக்கில் நிசேயா நம்புகையை அத்தனாசியுஸ் உயிர்ப்புடன் வைத்திருந்தார். கி.பி. 373ல் அவர் இறந்த பொழுதும் இந்த பிரச்சனை ஐயத்தில் இருந்தது, ஆனால் நிசேயா நம்புகையின் சக்திகள் தெளிவாக ஆரியவாதிகளுக்கு எதிராக வலிமை பெற்றிருந்தனர்.

அத்தனாசியுஸ், அவரது இறப்புக்குப் பிறகும், தமது எழுத்துகள் வழியாகத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். எல்லா கத்தோலிக்கரும் நன்றியுணர்வோடு நினைவுகூர வேண்டிய ஒரு சொற்றொடர் அவரது கல்லறைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது: *அத்தனாசியுஸ் கொந்த்ரா முந்தும்* (“உலகிற்கு எதிரான அத்தனாசியுஸ்”).

நமது விசுவாசத்தை இன்று உள்ளபடி நாம் கொண்டிருப்பதற்கு, வழுவில் விழுந்திருந்த தமது உலகிற்கு எதிராக ஒரு மனிதர் போராட வேண்டியிருந்தது. நமது உலகத்தில் தவறாக உள்ள பல விடயங்களில், வேறெவரும் நமது பக்கம் இல்லையெனினும் தனித்து செயல்படும் துணிவு நமக்குத் தேவைப்படுகிறது.